ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2179/14 - 2020 ජුනි මස 10 වැනි බදාදා - 2020.06.10

*2179/14 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : ல/பிசெ/3/3/7/3.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 13/96/FR/153.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

பொது மக்கள் தேவையொன்றெனக் குறிப்பிடப்படுவது நக்கல்ஸ் பாதுகாப்பு வலயத்திற்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், லக்கல பிரதேச செயலாளர் பிரிவிலே ஈ 386, எடன்வல கிராம அலுவலர் பிரிவில், வல்பொலமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, கலுபஹன வத்த காணி, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.09.10 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட, பூர்வாங்க வரைபடம் Topo PP No. 21, குறைநிரப்பி இல. 7, பத்திர இல. 35 இல் குறிப்பிடப்பட்ட 20.2343 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 1492, 1493 ஆகிய காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 1492**

காணியின் பெயர் : வல்பொலமுல்ல; விபரம் : வயல் (பயன்பாடற்ற); உரிமை கோருபவரின் பெயர், முகவரி : இல. 10, சாப்புவத்த, பலாபத்வல, மாத்தளையில் வதிவாய் இருந்து காலஞ்சென்ற கே. ஏ. எல்லேபொல; விஸ்தீரணம் : 1.8970 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 1493**

காணியின் பெயர் : வல்பொலமுல்ல; விபரம் : காடு; உரிமை கோருபவரின் பெயர், முகவரி : இல. 10, சாப்புவத்த, பலாபத்வல, மாத்தளையில் வதிவாய் இருந்து காலஞ்சென்ற கே. ஏ. எல்லேபொல; விஸ்தீரணம் : 18.3373 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ்.விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
லக்கல.

பிரதேச செயலகம்,
லக்கல.

6 - 188